தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 ஆகஸ்ட் 2022 கனி 9




MONTHLY

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 32
தலைப்பு : மார்க்கம் - The Way
வேத வாசிப்பு : எபிரெயர் 10:10-22




1. தாவீது ஜீவமார்க்கத்தை - சங்.16:11
2. யோவான் நீதியின் மார்க்கமாய் - மத்.21:32
3. இயேசு ஜீவனுமான மார்க்கத்தை - எபி.10:19,20



இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்

MARK ANTONY, Evangelist
CHURCH OF CHRIST
Sebasthiyarpuram
Nammunasamudram -622 422
PUDUKOTTAI DT
Cell:96268 61214



the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509







**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 22 ஆகஸ்ட் - 2022 கனி - 9


## ஆசிரியருரை

## முப்புரிநூல்
## A Threefold Cord



"ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" (பிர.4;12). ஆம், முப்புரிநூல் ஒரே நோக்கத்தோடு இணைக்கப் பட்டுள்ளது. அதை ஒரே காரியத்திற்குப் பயன்படுத்தும்போது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட அந்த நூல் பயன்படுத்தக்கூடிய காரியத்திற்கு உதவியாக இருக்கும். அது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறபடியால் வசனம் சொல்லுகிறபடி சீக்கிரமாய் அறாது. அதைப்போல மூவர் ஒருமனப்பட்டிருக்கும்போது அந்த ஒன்றுமையை யாராலும் பிரிக்கமுடியாது. "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" நம்முடைய ஆண்டவர் இயேசு (மத்.18:20). இயேசு என்ற நாமத்திலே முப்புரிநூலைப்போல எவர்கள் கூடுகிறார்களோ அங்கே கர்த்தர் இருப்பார். அவர்களுடைய நோக்கம் ஆசீர்வதிக்கப்படும். கணவன் மனைவி இருவரும் கர்த்தருடைய நாமத்தினாலே இணைக்கப்படுகிறார்கள். பின்பு முப்புரிநூலைப்போல பிள்ளைகள் வருகிறார்கள். அந்த குடும்பம் ஒரே காரியத்தை செய்து கர்த்தருக்குச் சாட்சியாக வாழுகிறார்கள். இருவர் அல்லது மூவர் ஒருமனப்பட்டு இருந்தால் பெரியகாரியங்களைச் செய்யலாம்.

ஒரு டிரஸ்ட் அமைப்பதற்கு கூட மூவர் அவசியமாயிருக்கிறது. தேவன் முதலாவது குடும்பத்தை ஏதேன் தோட்டத்தில் இப்படியே ஏற்படுத்தினார். மூவர் ஒருமனப்பட்டிருக்கும்போது பிதாவாகிய தேவன் நம்மில் அன்பாயிருப்பார் எனக் காண்கிறோம். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" (யோவா.14;23). குமாரனும் தேவனும் நம்மில் வாசம்பண்ண நாம் இயேசுவில் அன்பாயிருந்து அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளவேண்டும். ஆகையால் நாம் இயேசுவின் நாமத்தில் கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறோம்.

பவுல் சொல்லுகிறார்; "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்கிறார் (பிலி.4:13). நம்மைப்பெலப்படுத்துகிறவரும் அவரே. சிலவேளைகளில் நாம் சோர்ந்துபோகிறோம். அச்சமயத்தில் நம்மை பெலப்படுத்துகிறார். முப்புரிநூல் என்று

சொல்லும்போது அதில் பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுவும் அத்துடன் ஆவியானவரும் இருக்கவேண்டும். அப்பொழுது நாம் முழுபெலத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். தேவனுடைய ஆவியில்லாமல் நாம் ஒன்றையும் செய்யவோ சாதிக்கவோ முடியாது. அவருடைய ஆலோசனைக்கு நாம் முதலிடம் கொடுக்கவேண்டும். இயேசுவானவர் ஜெபிக்கும்போது; "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக்.22:42-44). இயேசுவை ஒரு தேவதூதன் பலப்படுத்தினான் என்று பார்க்கிறோம். அந்த அளவு அவர் மிகவும் வியாகுலத்தோடும், வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழும் அளவிற்கு அவர் பிதாவை நோக்கி ஜெபித்தார். ஆண்டவரே அவ்விதமாக ஜெபித்திருக்கும்போது நாம் எந்த அளவு ஜெபிக்கவேண்டும். ஆவிக்குரிய குடும்பத்தில் நிலைத்து அவரோடு ஐக்கியப்பட்டு ஜெபிக்கவேண்டும். அப்படி ஜெபிக்கும்போது தேவன் நம்மையும் பெலப்படுத்தி அந்த ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார்.

ஜெபத்தில் ஒருமனம் இருக்கவேண்டும். ஆதி அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் "ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணினார்கள்" என அப்.2:46-ம் வசனத்தில் படிக்கிறோம். ஒருமனதோடு ஜெபிக்கும் ஜெபத்திற்கு வல்லமையுண்டு, அதை தேவன் ஏற்றுக்கொள்ளுவார். மேலும் அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கும்போது; "அவர்கள் அதைக்கேட்டு ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு; கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்" என்றார்கள் (அப்.4:24). ஒருமனம் உயர்வைக்கொண்டுவரும். தேவனை அறிகிற அறிவுக்கு நேரே நம்மை வழிநடத்தும். உங்களுடைய சபைகளிலும் குடும்பத்திலும் ஒருமனதோடு இருக்க முயற்சியுங்கள். அங்கே தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கும். ஆண்டவர் ஜெபிக்கும்போதுகூட; "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார் (யோவா.17:21). இந்த ஜெபத்தைக் கவனித்தீர்களா? இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள். இந்த ஒன்றுமை எல்லா இடங்களிலும் வரவேண்டும் இதுவே இயேசுவின் ஜெபமாயிருந்தது. நீங்கள் ஒற்றுமைக்காக ஜெபிக்கிறீர்களா? பிரிவினையை ஏற்படுத்தும் தீயவர்களை கழந்துகொள்ளுகிறீர்களா? நாம் எல்லோரும் ஒன்றாயிருக்கவும் ஒருமனப்பாட்டிலே தேறினவர்களாயிருக்கவும் ஆண்டவர் விரும்புகிறார். முப்புரிநூலைப்போல இருந்து ஒரே காரியத்தைப் பேசவும் செய்யவும் முற்படுங்கள். அதைச் செய்வீர்களா? அப்படிச் செய்யும்போது தேவனால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். இஸ்ரவேலின் ராஜ்யங்கள் பிரிந்தது அதை தேவன் விரும்பவில்லை. மனிதர்கள் பிரித்தார்கள். அதைப்போல பிரிவினைவாதிகள் சபையைப் பிரிக்கிறார்கள். ஆனால் தேவன் பிரிவினையை விரும்பவில்லை எல்லோரும் ஒன்றாயிருக்கும்படியே

விரும்புகிறார். ஆகையால் ஒரே பரலோகத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். பிரிவினை செய்கிறவர்கள் அதில் பிரவேசிக்கமுடியாது. பிரிவினையை பிசாசு ஏற்படுத்துகிறான் அவன் ஆதிமுதலாக மனிதனுக்குள் பிரிவினையை உண்டாக்குகிறான்.

பவுல்; கொரிந்து சபைக்கு எழுதும்போது; "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" என்கிறார் (1கொரி.1:10). பிரிவினைகளை முதல் நூற்றாண்டிலே அப்போஸ்தலர்கள் கடிந்துகொண்டிருக்கிறதை நாம் காண்கிறோம். தேவன் கலகத்திற்கு தேவன் அல்ல. நாம் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படியே தேவன் விரும்புகிறார். சபையாக கூடுகிறவர்கள் ஒரே காரியத்தைப் பேசவேண்டும், ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டும். இதில் குறைய காணப்படுவோமென்றால் அதை சரிசெய்து கொள்ள சகோதர சிநேகத்திலே ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருமனதிற்கு மாதிரியாக நாம் பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்களை கவனிக்கவேண்டும். "(பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் பூலோகத்திலே) சாட்சியிடுகிறவைகள் மூன்று ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" என வேதம் தெளிவாகபோதிக்கிறது (1யோவா.5:7,8). இவர்களைப்போல நாமும் ஒன்றாயிருக்கவும் ஒரே காரியத்தை பேசவும் தியானிக்கவும் செய்யும்போது முப்புரிநூலைப்போல இருப்போம்.

ஆண்டவர் தனித்திருக்கும்படி கடந்து செல்லும்போது; அவர் சில சீஷர்களை அழைத்துக்கொண்டு போனார். "ஆறுநாளைக்குப் பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி மலையின்மேல் போய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்" (மத்.17:1-3). இங்கே தனித்திருக்கும்படி சென்றார், ஆனால் நடந்தது என்ன? அவர் மோசேயோடும் எலியாவோடும் பேசுகிறதை சீஷர்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவர் எதைக்குறித்து பேசினார்? தன்னுடைய மரணத்தைக்குறித்து அவர்களோடு பேசினார். மோசேயும் எலியாவும் பழையஏற்பாட்டு தீர்க்கதரிசிகள். இருவருமே மிகப்பெரிய வழிநடத்துனர்கள். இயேசு இவர்களோடு ஆலோசனை செய்து இருக்கிறார் என்றால் அது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? நாம் ஒரு ஆலோசனை கேட்க அந்நியர்களை நாடுகிறோம். நம்முடைய சகோதரர்கள் இருக்கும்போது நாம் ஏன் அந்நியர்களை நாடவேண்டும், ஒரே குடும்பத்தில் உள்ள ஆவிக்குரிய சகோதரர்கள் இருக்கும்போது அவர்களோடு பேசும்போது அது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். மோசேயும் எலியாவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய மனிதர்கள் ஆகையால் அவர்களோடு பேசினார். அதுமாத்திரமல்ல இவர்கள் நிஜத்தை நோக்கிப்பார்த்தவர்கள். ஆனால் நிழலில் வழிநடத்தப்பட்டார்கள்.

ஒன்று பட்டு தேவனுடைய சித்தத்தை நாம் நிறைவேற்றவேண்டும். இயேசு சொல்கிறார்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி

செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை'' என்றார் (மத்.7:21). அநேகர் இப்படித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்டவரை கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லி கூப்பிடுகிறார்கள் ஆனால் அவர் சொல்லுகிறபடி ஒன்றும் செய்வதில்லை. ஒவ்வொருவரும் பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தம் செய்யவேண்டும். அவருடைய சித்தம் என்ன? நாமெல்லாரும் அவர்களைப்போல ஒன்றாயிருக்கவேண்டும். ஏனெனில்; ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்'' என்றார் (மத்.12:50).

நீங்கள் ஆண்டவருக்கு சகோதரனாகவும் சகோதரியாகவும் தாயாகவும் இருக்கவிரும்பினால் தேவனுடைய சித்தத்தின்படி வாழுங்கள். அப்பொழுது அவருக்கு சகோதர, சகோதரிகளாக இருப்பீர்கள். இல்லையேல் உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். தேவசித்தம் பரலோகத்திலே எப்படி செய்யப்படுகிறதோ அதைப்போல பூமியிலேயும் செய்யப்படவேண்டும். அது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இயேசுவானவர் ஜெபிக்க கற்றுக்கொடுக்கும்போது அதைச் சொல்லுகிறார்; ''உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக'' என்றார் (மத்.6:10). பூமியிலே தேவ சித்தம் எப்படிச் செய்யப்படவேண்டும்? ஆவிக்குரிய தொழுகை நடைபெறவேண்டுமென்றால்; ''உண்மையாய் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மை யோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்'' (யோவா.4:23,24). இந்த விதமாக தொழுதுகொண்டு தேவசித்தம் செய்கிறீர்களா? அப்படிச்செய்வதையே தேவன் விரும்புகிறார்.

**முப்புரிநூலைப்போல முதல் நூற்றாண்டில் இருந்து கொண்டு வேலைபார்த்தவர்கள் யார்?**

பவுல் சொல்லுகிறார்; ''கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்'' என குறிப்பிடுகிறார் (ரோம.16:3,4). ஒருமனப்பட்டவர்கள் என்றால் இப்படித்தானிருக்கவேண்டும்.

பவுல் மற்றும் பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாளும் முப்புரிநூலைப்போல புதியஏற்பாட்டு கிறிஸ்தவத்தில் நிலைத்திருந்தவர்கள். கர்த்தருடைய ஊழியத்தில் இணைக்கப்பட்ட ஒவ்வொருவரும் இவர்களைப்போல கள்ளங்கபட மில்லாதவர்களாக இருந்துகொண்டு கர்த்தருடைய ஊழியத்தை சிறப்புடன் செய்ய ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். இப்படியிருப்போமானால் முப்புரிநூலைப்போல இருப்போம். நீங்களும் அவ்விதமாக இருந்து செயல்பட உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# லஞ்சம் – Bribery

-J.C.Choate



– சென்ற மாதஇதழின் தொடர்ச்சி

இயேசுவின் நாட்களுக்கு வரும்போது, கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார், அதன்பின் காவல் சேவகர்கள் அவருடைய சரீரத்தை சீஷர்கள் களவாடிச்சென்று, மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று சொல்லக்கூடாது என்பதை உறுதிசெய்யும்படி கல்லறையைக் காவல் காத்தனர் என்று வாசிக்கிறோம். ஆனால் மத்தேயு 28ல் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார் என அறிவிக்கப்படுகிறோம். "காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள்" (மத்.28:4). மேலும் நாம், "அவர்கள் போகையில், காவல்சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். இவர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள். இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள்வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது" (மத்.28:11-15) என்று வாசிக்கிறோம்.

எனவே என்ன நடந்தது என்று நீங்கள் காணலாம். இயேசு கல்லறையிலிருந்து அற்புதவிதமாக உயிர்த்தெழுந்தார், ஆனால் அந்நாட்களின் மதத்தலைவர்கள் அவருக்கு எதிராக திட்டம் தீட்டி, உண்மையாகவே அவருடைய உயிர்த்தெழுதலைக் கண்ட காவல் சேவகர்களை அழைத்து அவர்களிடம் இயேசுவின் சீஷர்கள் வந்து அவருடைய சரீரத்தை களவாய் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள் என்று சொல்லி அவர்களுக்கு அதிகப்படியான பணத்தைக் கொடுத்தனர். மேலும் இது குறித்த செய்தி தேசாதிபதிக்குக் கேள்வியானால் யூதர்களின் மூப்பர்கள் உங்களைத் தப்புவிப்பார்கள் என காவல் சேவகர்கள் உறுதியளிக்கப்பட்டார்கள். இந்த லஞ்சம், இவர்களுடைய பொய்யின் விளைவினால், யூதர்களில் அநேகர் உண்மையாகவே இந்தப் பொய்யை நம்பினார்கள்.

எனவே லஞ்சத்தின் பிரச்சனையானது எப்போதும் இருக்கிறது. ஆனால் நாம் இது குறித்து என்ன செய்யப்போகிறோம்? முதலாவதாக கிறிஸ்தவர்களாகிய நாம் நாட்டின் சட்டங்களுக்குக் கண்டிப்பாகக் கீழ்ப்படியவேண்டும், ஆனால் நமது நிமித்தம் லஞ்சம் வாங்கும் அலுவலர்கள் சட்டத்தை உடைத்து போடக்கூடாது. பவுல், "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற

அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியை களுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படா திருக்கவேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக் காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமைசெய்கிறவன்மேல் கோபக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்துவருகிற தேவஊழியக்காரராயிருக்கிறார்களே. ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கானம்பண்ணுங்கள்" (ரோம.13:1-7) என்றான்.

லஞ்சத்தைப் பற்றிய விஷயத்தில் நாம் என்ன செய்யலாம்? லஞ்சத்தை ஏற்றுக்கொள்ளாதீர்கள் மேலும் லஞ்சம் கொடுப்பதை மறுத்துவிடுங்கள். நேர்மையாக இருப்பதினாலும், சட்டத்தைக் காப்பதினாலும் ஒருவேளை சில கூடுதல் நேரத்தையும், பிரச்சனைகளையும் பலனாக எதிர்கொள்ளலாம், ஆனால் முடிவிலே உங்கள் நிலையில் நிலைத்திருந்தால், நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்களோ அதை லஞ்சம் கொடுக்காமல் வெற்றிகரமாக பெற்றுக்கொள்ளுவீர்கள். அநேகர் காரியங்கள் சீக்கிரத்தில் கைகூடிவரவேண்டுமென்ற மிகுந்த கவலையினால் தாங்கள் விரும்புகிறதைப் பெறும்படி அவர்கள் விடாது முயற்சி செய்து, தாங்கள் விரும்பினதை பெறும்படிக்கு பணத்தை இப்பொழுதும், எப்பொழுதும் கொடுப்பதே பிரச்சனையாக இருக்கிறது. அது தவறு.

முதலாளிகளே, உங்களுக்காக வேலைசெய்பவர்களை மதித்து அவர்களுடைய ஜீவனத்திற்குரிய சம்பளத்தைக் கொடுங்கள். வேலைக்காரரே, உங்கள் வாழ்விற்குப் போதுமான சம்பளத்தை நீங்கள் பெறவில்லையென்றால் வேறுவழியில் லஞ்சம் வாங்குவதற்குப் பதிலாக, இரண்டாவது வேலையை தெரிந்தெடுங்கள் அல்லது அதிக வருமானம் கிடைக்கும் வேலையை தேட முயற்சியுங்கள். லஞ்சம் கொடுப்பவர்களை மறுத்து அவர்களுக்கு மேல் உள்ளவர்களுக்கு அவர்களைக் குறித்து புகாரளியுங்கள்.

எல்லோரும் இதைச் செய்கிறார்கள் என்று நீங்கள் நியாயப்படுத்தலாம் மற்றும் இவ்விஷயங்களை மாற்ற ஒருவர் என்ன செய்ய முடியும்? அதனால் தான்

இது தொடர்கிறது. லஞ்சம் வாங்குபவர்கள், மக்கள் இதைப் பற்றி எதுவும் செய்யவில்லை என்று எண்ணுகிறார்கள். ஆனால் மாறாக, "மேசைக்குக் கீழே" எதிர்பார்த்ததைச் செலுத்துகிறார்கள்.

லஞ்சம் கொடுப்பது அல்லது வாங்குவது தேவனுக்கு முன்பாக பாவமாக இருக்கிறது. குற்ற உணர்வு கொண்ட மனசாட்சியை உடையவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டு, இரவில் தூக்கத்திற்கு இடமளிக்கிறதில்லை. கிறிஸ்துவின் நாமம் தரிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொருவரும் இந்த பாவ பழக்கத்தினை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

## தெரிந்து கொள்ளுவோம் — முசோலினி

- பாசிச கொள்கை தோன்றிய ஆண்டு 1919
- பாசிச கொள்கையின் சிற்பி முசோலினி
- பாசிசம் குறிப்பிடுவது சர்வாதிகார ஆட்சி
- பாசிசத்தின் நோக்கம் தேசிய அரசியலை அதிகம் வலியுறுத்துவது
- பாசிசம் வலியுறுத்துவது வல்லாட்சி முறையை
- பாசிச கொள்கை ஒரே கட்சி, ஒரே தலைவர்
- பாசிசம் என்பது மக்கள் ஆட்சி முறைக்கு முரணானது

## *நடப்புச் செய்திகள்*

- **உணவுப்பற்றாக்குறைவரும் ஆபாயம் உள்ளது**
- **இலங்கையில் அனைத்துவிதமான தட்டுப்பாடுகளும் அதிகரித்துள்ளது**
- **கொடைக்கானலில் பேசன்ஃப்புரூட் அழிவின் விளிம்பில் உள்ளது.**

## நான் யார்? – Who Am I?



- என் தாய்க்கு நான் மூத்தவன்
- என் தகப்பன் என் சகோதரர் எல்லாரிலும் என்னை நேசித்தார்
- நான் 20 வெள்ளிக்கு விற்கப்பட்டேன்
- பார்வோன் என்னை அதிகாரியாக்கினான்
- என்னைக்குறித்து கேள்விப்பட்ட என் தகப்பனுடைய ஆவி உயிர்த்தது
- என் தகப்பன் என்னை கனிதரும்செடி என்று ஆசீர்வதித்தார்
- என் எலும்புகளை எடுத்துக்கொண்டுபோய் அடக்கம்பண்ணினார்கள்

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி – 47***

**47. எப்படி ஜெபிக்கவேண்டும்? எப்படி ஜெபிக்கக்கூடாது?**

1. உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு ☐ வசன ஆதாரம் ---------
2. அப்பா பிதாவே! என்று இயேசுவை நோக்கி ஜெபிக்க முடியாது ☐ வசன ஆதாரம்----------
3. இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கவேண்டும் ☐ வசன ஆதாரம்----------
4. பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினால் ☐ வசன ஆதாரம் ---------
5. ஆயக்காரனைப்போல ஜெபிக்கவேண்டும் ☐ வசன ஆதாரம்----------
6. பரிசேயனைப்போல ஜெபிக்கவேண்டும் ☐ வசன ஆதாரம்----------
7. பார்வைக்காக ஜெபிக்கக்கூடாது ☐ வசன ஆதாரம்----------
8. வேதபாரகரைப்போல ஜெபிக்கவேண்டும் ☐ வசன ஆதாரம்----------
9. வீண்வார்த்தைகளினால் அலப்பக்கூடாது ☐ வசன ஆதாரம்----------
10. அதிக வசனிப்பினால் ஜெபிக்கவேண்டும் ☐ வசன ஆதாரம்----------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**



**JOIN OUR**
**WORLD EVANGELISM**
**BIBLE SCHOOL**
**RIGHT NOW**

*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**



விசுவாசமும் விசுவாச வீரர்களும்

பாடம்: 4 Faith and Faith Ful Knights

- K.R.K.Ravi Asir

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

"காயீனையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி அவன் முகநாடிவேறுபட்டது" (ஆதி.4:5) ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் 1தெசலோ.5:14-16 வசனங்களில் "மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத்தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" என்று எழுதியிருக்கிறார். எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள் என்று இவ்வசனப்பகுதி சொல்கிறது. ஆனால் காயீனோ மிகவும் எரிச்சல் கொண்டவனாயிருந்தான். ஆனாலும் விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையானபலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்.

## பாடம் - 5 சாட்சி பெற்றான்

"அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபி.9:27-28).

மேற்கண்ட வசனக்குறிப்பின்படி ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். ஆனால் விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே அவன் காணப்படாமற்போனான் என்று எபி.11:5 ல் நாம் வாசிக்கிறோம். இதன் மூலம் ஏனோக்கு தேவனுடைய பார்வையில் விசேஷமான வனாக காணப்பட்டான் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். நாம் யாவரும் அறிந்திருக்கிறபடி விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ரோமாபுரியிலிருந்த சபையாரை அப்போஸ்தலனாகிய பவுல் தேவப்பிரியர் என்று அழைக்கிறார் (ரோம.1:2).

மோசே மரணமடையும் முன்னே "பென்யமீனைக் குறித்து: கர்த்தருக்குப் பிரியமானவன்,அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார் என்றான்" (உபாக.33:12). "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" என்று ஆதி.5:24 சொல்கிறது. "ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்" என்று (ஆதி.5:22) உரைக்கிறது. இவ்வசனத்திலிருந்து நாம் என்ன அறிந்து கொள்கிறோம்? ஏனோக்கின் விவாக வாழ்க்கையானது அவன் தேவனோடே சஞ்சரிப்பதற்கு தடையாயிருக்கவில்லை என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். சங்கீதக்காரனாகிய தாவீது, சங்.71:16 ல் "கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப் பற்றியே மேன்மைபாராட்டுவேன்" என்று உரைத்திருக்கிறார்.

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

Bible Characters

3



## பரிசுத்த வேதாகமத்தில் நோவா


## Noah In The Holy Bible

1. கர்த்தருடைய கண்களில் கிருபைபெற்றான் - ஆதி.6:8
2. நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் - ஆதி.6:9
3. மெத்தூசலாவின் பேரன், லாமேக்குவின் மகன் - ஆதி.5:26
4. காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்பை பெற்றான் - எபி.11:7
5. தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான் - ஆதி.6:22
6. இனி ஜலப்பிரளையம் உண்டாவதில்லை - ஆதி.9:11
7. அவபக்தியானவர்களுக்கு திருஷ்டாந்தம் - 2பேது.2:5
8. நோவாவின் நாட்களில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் - மத்.24:37
9. ஒரு தேசம் பாவஞ்செய்தால்... நோவா, தானியேல், யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் - எசே.14:13
10. நோவா உயிரோடிருந்த நாட்கள் 950 வருஷம் - ஆதி.9:29

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***கர்த்தர் யாருடைய நாட்களில் மனுஷன் இருக்கப்போகிற நாட்கள் 120 வருஷம் என்றார்?***

**விடை:** "அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்" **(நோவாவின்)** - ஆதியாகமம் 6:3



பு.ஏ


## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

4



### பரிசுத்த வேதாகமத்தில் இயேசு
### Jesus In The Holy Bible

1. இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் - மத்.1:21
2. ஏசாயா: சொன்னபடி இம்மானுவேல் என்று பேரிட்டார்கள் - மத்.1:23
3. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் - யோவா.1:2
4. அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளை களாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் - யோவா.1:12
5. எல்லாரும் அவருடைய சத்தத்தைக்கேட்குங் காலம் வரும் - யோவா.5:28
6. தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் - மாற்.10:45
7. ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் - லூக்.9:23
8. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு - அப்.4:12
9. தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி - அப்.10:42
10. அவருடைய இரண்டாம் வருகை - 1தெச.4:16



**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**இயேசு ஞானஸ்நானம் கொடுத்தாரா?**

**விடை:** "இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்" - யோவான் 4:3

I N D I A   P O S T




## ஆசிரியர் கடிதம்...

*வாசகர் அனைவருக்கும் இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள். எமது மாதஇதழை தொடர்ந்து பெற்றுவருவீர்கள் என்று நம்புகிறோம். சிலருக்கு மாதஇதழ் கிடைப்பதில்லை என்று தெரியப்படுத்துகிறார்கள். எங்களுக்கும் அவ்விதழ் திரும்ப வருவதில்லை. இது குறித்து ஆய்வுசெய்துவருகிறோம்.*

*தயவு செய்து மாதஇதழ் கிடைத்தவுடன் எங்களுக்கு தகவல் கொடுக்கவும். இதழை பல முறை வாசித்துப்பாருங்கள். உங்களுடைய நண்பர்கள் உறவினர்களுக்கும் கொடுத்து உதவிடுங்கள். ஜெபிக்கிறோம்.*

*நன்றி, அன்புடன் ஆசிரியர்*

பெண்கள் பகுதி



## வேதாகமத்தில் பாதுகாப்புகள்
### Safeguards in Scripture
*-Betty*

தேவன் எவ்வளவு ஞானமுள்ளவர், வேதாகமத்தில் அவருடைய ஞானம் எவ்வளவு அழகாக விளக்கப்பட்டுள்ளது! "எப்படி என்று?" நீங்கள் கேட்பீர்கள், உங்களோடு கூட அவருடைய ஞானத்தின் சாட்சிகளை நான் ஆராய்ச்சி செய்யட்டும்:

❑ **முதலாவது, அவருடைய வெளிப்பாடுகள், வழிநடத்துதல்கள், எச்சரிக்கைகள் மேலும் வாக்குத்தத்தங்கள் சிறந்த சாத்தியமான வழியில் நிறைவேற்றபடும்படிக்கு அவர் இவற்றையெல்லாம் காக்கும்படி தெரிந்தெடுத்த வழிமுறைகள்:** அந்த வழிமுறைகள் என்ன? இது எழுதப்பட்ட பதிவேடு, முதலாவது நிறைவேற்றப்பட்ட அற்புதங்கள் அடையாளங்கள் சமயோசித ஞானத்தில் உறுதியாக்கப்பட்டது.

ஏன் "எழுதப்பட்ட வார்த்தைகள்" சொற்களாலான செய்திகள் தொடர்ந்து சொல்லப்பட தெரிவுசெய்யப்பட்டுள்ளது? ஏனென்றால் வேதாகமம் முழுவதும் வெளிப்படுத்தப்பட்டவை, அதிலிருந்து ஒன்றும் கூட்டக்கூடாது அல்லது குறைக்கக்கூடாது என்று எச்சரிப்புடன் முடிக்கப்பட்டுள்ளது. கூடுதலான எந்த வெளிப்பாடுகளும் தேவனால் கொடுக்கப்படவில்லை; அவருடைய வார்த்தை முற்றுபெற்றாயிற்று: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ.3:16,17).

இன்று தங்களோடு தேவன் நேரடியாக பேசுகிறார் என்றும், தங்களுக்கு ஒரு புதிய செய்தியை கொடுத்திருக்கிறாரென்றும் உரிமை பாராட்டிக்கொண்டிருக்கிற போலித்தனமான மதத் தலைவர்கள் இருக்கின்றனர். அப்படியிருந்தால், பல நூற்றாண்டுகளாக, மனிதனோடு தேவனுடைய தொடர்ச்சியான தொடர்புகொள்ளும் வழி நேரடியானதும், தனிப்பட்ட வெளிப்பாடும், நாம் ஒவ்வொருவருடைய இரக்கத்தைச் சார்ந்து ஆத்ம உணர்ச்சியை சொந்தம் பாராட்டிக்கொண்டிருப்பவர்களாய் இருக்க வேண்டியிருக்கும் (எபே.4:11-15). அதிகக் கூட்டமானவர்களுக்கிடையே யுள்ள தொடர்பு இன்றைய நாளில் எப்படியுள்ளது, இது உண்மையாகவே உண்மையான "தீர்க்கதரிசிக்கும்" ஒரு கள்ளத்தீர்க்கதரிசிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை கண்டுகொள்வது நமக்கு இயலாததாக இருக்கிறது. இயேசு மத்தேயு 24:24-ல் கள்ளப் போதகர்கள் அவருடைய நாமத்தில் எழும்புவார்கள் என்று எச்சரித்தார். பழைய ஏற்பாட்டிலும் கூட, தேவன் "தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது..." (எரே.5:31) என்று எச்சரித்தார்.

உறுதிப்படுத்தப்பட்டு எழுதப்பட்ட செய்தியான வேதாகமத்தை கொண்டிருக்கையில், நாம் இப்படிப்பட்ட விழுதலுக்குக்கேதுவான வஞ்சிக்கப்படுவதிலிருந்து காக்கப்பட்டிருக்கிறோம். நாம் இந்த விளக்கங்களை மட்டும் அறிந்திருக்கவில்லை ஆனால் இன்று மனிதவர்க்கத்திற்காக கர்த்தருடைய முழுமையான சித்தத்தையும் கூட அறிந்திருக்கிறோம்.

❑ **இரண்டாவது, நாம் ஆலோசிக்கத்தக்க காரியத்தின் ஒப்பற்ற ஒழுங்கில் தேவனுடைய ஞானத்தைக் காண்கிறோம்.** சிலவேளைகளில், நான் தேவன் வெறுமனே தம்முடைய கட்டளைகளை 1,2,3,4 என்பது போல எழுதியிருந்தார் என்ற கூற்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவர் அவ்வாறு செய்திருப்பாரென்றால், அது இழந்து போவதற்கு அல்லது தவறானமொழி பெயர்ப்பு ஏற்படும்படிக்கு உண்மையின் ஒரு தனித்த பதிவேடானது மிக சுலபமாக என்றென்றுமாய் அழிந்துபோயிருக்கும். மாறாக, தேவன் இரு-நோக்க திட்டத்தை ஏற்படுத்தினார். ஒன்று எண்ணற்ற பகுதிகளில் சத்தியத்தைக் குறிப்பிடுவதிலும், அவர் அதனுடைய பாதுகாப்பிற்கான உறுதியையும் அளித்துள்ளார். ஒருவரும் தவறான மொழிபெயர்ப்பிற்காக எல்லா பகுதிகளையும் நிர்ணயிக்க முடியாது; மாறாமல் ஒரே மாதிரியாக, ஒரு சிறிய விஷயத்தில் கூட, பல பகுதிகள் மறுபரிசீலனைபடுத்தப்படுகிறது. இது ஒருவேளை பார்ப்பதற்கு "முரண்பாடாக" தோன்றும், ஆனால் மாணவர்கள் மனதில் இது சிவப்புக் கொடியாக உயர்ந்திருக்கும். மற்ற மொழிபெயர்ப்போடு ஒத்துப்பார்க்கவும் தவறுகளை தவறான மொழிபெயர்ப்பில் கண்டுபிடிக்கவும் அவனுக்கு இது காரணமாக அமையலாம்.

தேவனுடைய ஞானத்திலிருந்து இரண்டாவது பலன் எண்ணற்ற பகுதிகளின் அதே சத்தியத்தின் இயற்கையான தங்க தாதுவளம் நிறைந்த பகுதியில் அந்த மாணவன் தொடர்ந்து ஆராய்ந்து தேடுவதிலிருந்து தன்னுடைய அறிவை இந்த குறிபிட்ட காரியத்தின் மேல் அதிகரித்துக் கொள்கிறான். எப்போதும் அதிகமாக கற்றிருக்க வேண்டும் என்ற உணர்வுடையவனாக, அவன் "தினமும் வேதாகமத்தை ஆராய்ந்து பார்ப்பதில்..." (அப்.17:11) ஆவலுள்ளவனாய் இருப்பான்.

❑ **மூன்றாவது, தேவன் குறிப்பிட்ட சத்தியங்களை பாதுகாக்க "தணிக்கைகளை" தவறானவற்றிற்கு எதிராக நுழைக்கின்றார்.** பல வருடங்களாக என்னுடைய தனிப்பட்ட ஆய்வில், நான் மதக்கோட்பாடுகளைத் தவறாகக் கற்பிக்க சாதமான "பாடப்பகுதிகளை" வழக்கமான கூற்றுகளாக (வசனத்திற்கு முன்னால் அல்லது பின்னால்) தவறான போதனைக்கு எதிரான பாதுகாப்பைப்போல தெரிவுசெய்திருப்பதை கவனித்திருக்கிறேன் எடுத்துக்காட்டாக:

◆ **கிருபையினால் மட்டும் இரட்சிக்கப்பட்டீர்கள்..."** எபேசி.2:8 சொல்கிறது "...கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு

இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு, ...இது கிரியையினால் உண்டானதல்ல" இந்தப்பகுதியில் நாம் இரட்சிக்கப்படுவதற்கு உள்ளும் புறம்பேயும் எதுவும் செய்யவேண்டியதில்லை என்று போதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வசனம் 10 நாம் நற்கிரியைகளைச் செய்வதற்கென்று சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்: "...நற்கிரியைகளுக்காக..."என்று சொல்லுகிறது. ஆனபடியினால், நம்முடைய சொந்த நற்கிரியைகள், கிறிஸ்துவுக்குள் நம்முடைய இரட்சிப்பிற்கான மிக உறுதியான திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

◆ **"நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்..."** கலாத்தியர் 3:26-ல் அழகாக விவரிக்கப்பட்டுள்ளது. "...நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" எனவே நாமெல்லாரும் "விசுவாசத்தினாலே மாத்திரம்" இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று போதிப்பதற்கு இது ஒரு "நிரூபனபாடப்பகுதி" ஆக மாறியிருக்கிறது.

ஆனால் 27-ம் வசனம் இந்த பிழையான முடிவுரையை தெளிவான குறிப்பினால் தடைசெய்கிறது, "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத்தரித்துக் கொண்டீர்களே".

◆ **முதல் நூற்றாண்டில் கூட "விசுவாசத்தினாலே மாத்திரம்" இரட்சிப்புவருகிறது என்று போதிக்க முயற்சித்தவர்கள் இருந்தனர்,** இது யாக்கோபு 2:14-26-ல் விளக்கப்பட்டது போலிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இந்த பகுதிமட்டுமே "விசுவாசத்தினாலே மாத்திரம்" என்று பேசுகிறது மேலும் இந்த பாடப்பகுதி, "ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக்கோபு 2:24) என்று பேசுகிறது.

◆ **1 யோவான் 5:1-ல் கூட நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டால், நாம் "தேவனால் பிறந்தவர்கள்" என்று போதிக்கப் பயன்படுத்தப்படுகிறது - இரட்சிக்கப்பட்டோம்:** "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்..."

ஆனால் வசனம் 3 தொடர்ந்து உண்மையாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவரால் பிறந்திருப்போமானால், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோம் என்று விவரிக்கிறது. "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து **அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது,** தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்பு கூருகிறோமென்று அறிந்து கொள்கிறோம்"

◆ **நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்க தடைசெய்யப்பட்டவர்களாயிருக்கிறோம்** என்று சொல்லுகிறவர்கள் உண்டு அவர்கள் தங்களுடைய முடிவுரையில் அடித்தளம் இடுகின்றனர் - மேலும் அவர்களுடைய பாதுகாப்பு எந்த நியாயத்தீர்ப்பிலிருந்தும் விலகியிருக்க வேண்டும் - மத்தேயு 7:1 "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்".

எப்படியாயினும், இது உண்மையாகவே நியாயத்தீர்ப்பின் ஆக்கினையல்ல ஆனால் மாய்மாலம்! வசனம் 4 மற்றும் 5 விளக்குகிறது: "...உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய். "நீதியான நியாயத்தீர்ப்பு, வேதவாக்கியத்தை சார்ந்தது, இது தவறான சகோதரனுக்காக அல்லது ஏதோ ஒரு பாவிக்கு மட்டுமே. ஆனால் மாய்மாலக்காரன் ஒருவனுக்கு உதவிசெய்யும் நிலையில் இல்லை, எனவே இந்த பகுதியானது ஒரு தவறான வழியில் செல்பவனுக்கு உதவி செய்ய முயற்சிப்பதற்கு முன்பாக நாம் நம்முடைய வாழ்வினை தேவனுக்கு நேராக கொண்டு செல்ல வேண்டும்.

◆ **பிறப்பாலேயே எல்லா குழந்தைகளும் பாவிகள் என்று பலர் போதிக்கின்றனர்,** சங்கீதம் 51;5 ஐ தவறாக புரிந்து கொண்டு இதன் அடிப்படையில் இந்த கோட்பாட்டினைப் போதிக்கின்றனர். "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" வசனத்தை கவனமின்றி வாசித்ததினால் இரு பாவமும் பிறப்பு தவறான நம்பிக்கையின் விளைவு என குறிப்பிடப்படுகிறது. "நான் பாவத்தோடு பிறந்தேன்" என்று தாவீது கூறினானா? "நான் கர்ப்பத்திலே ஒரு பாவி" என்று அவன் கூறினானா? இல்லை, அவன் அவனுடைய தாய் (பெற்றோர்) ஒரு பாவி என்று கூறினான், மேலும் அவன் பாவம் நிறைந்த ஒரு உலகத்திற்குள் பிறந்தான் என்று கூறினான். நிச்சயமாக, இவைகளெல்லாம் உண்மையான கூற்றுகள். பொறுப்புடைய வயதை எட்டின எல்லாருமே பாவிகள், மேலும் உலகம் ஒரு பாவம் நிறைந்த இடம், ஆனால் இந்த வசனம் ஒரு குழந்தை தன்னுடைய பெற்றோரின் பாவங்களில் பிறக்கிறது அல்லது உலகத்தின் பாவங்களில் பிறக்கிறது (எசேக்.18:19,20) என்று கூறவில்லை.

◆ **அநேக பிரிவினை சபை மக்கள் கிறிஸ்துமீண்டும் இந்த பூமிக்கு வந்து ஆயிரம் வருஷம் ஆட்சி செய்வார் என்று நம்புகின்றனர்.** அவர்கள் இந்த போதனையை சார்ந்து தேவதூதனால் சொல்லப்படுகிற வெளிப்படுத்தின விசேஷம் 20:2 ஐ "...பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டி வைத்து," என தங்களுடைய கருத்தினை விவரிக்கின்றனர். ஆனால், மேலும் இந்த பகுதியை வாசிக்கையில், இது அந்த சமயத்தில் "இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும்... அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்" இந்தக் காட்சி பரலோகத்திற்குரியதே, பூமியின் மேல் அல்ல, இப்போது கிறிஸ்து இராஜாதி இராஜாவாகவும் மேலும் கர்த்தாதி கர்த்தராகவும் ஆட்சி செய்கிறார் (வெளி.20:4-6)

நாம் தேவனுடைய வார்த்தையை மிகக்கவனமாகக் கைக்கொண்டு, சத்தியத்தியத்தை அறியும்படிக்கு ஜெபம் செய்வோமாக.



பெண்கள் பகுதி

## ஆதாமும் ஏவாளும்

**Adam and Eve** *-Glory Arjunan*

**– சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

**மூன்றாவதாக, ஏதோ ஒன்று பார்வைக்கு அழகுள்ளதாயிருப்பதால் அதையெல்லாம் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அர்த்தம் கிடையாது `Just because it looks good don`t mean that we should have it':**

ஏவாளின் பார்வைக்கு விலக்கப்பட்ட விருட்சம் இன்பமாகத் தான் இருந்தது (ஆதி.3:6). தேவன் அவர்களுக்கென்று "...பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும் முளைக்கப்பண்ணினார்" (ஆதி.2:9). ஆம் தேவனாகிய கர்த்தர் உண்டுபண்ணின எல்லாமே அழகுள்ளது தான். அவர் நமக்கென்று சிலவற்றைக் கொடுத்திருக்கிறார். அது நமக்கு நன்மையானதும் ஏற்றதுமாகவும் இருக்கும். ஆனால் நாமோ சிலவேளைகளில் மற்றவர்களைப் பார்த்து, அவர்களிடமிருக்கிற பொருள் மிக அழகாக இருக்கிறதே, நமக்கும் அதைப் போல ஒன்று இருந்தால் நன்றாக இருக்குமே என்று அநேக காரியங்கள் அல்லது பொருட்களைப் பார்த்து அவைகள் நம் பார்வைக்கு இன்பமாக இருக்கிறது என்று எண்ணுவோமானால் ஏவாளுக்கு ஏற்பட்ட நிலை தான் நமக்கும் ஏற்படும். நம்மிடம் உள்ளதையும் விட்டுவிடவேண்டி வந்தாலும் வரலாம். அழகான ஏதேன் தோட்டத்தில் சந்தோஷமாக இருந்தவர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டார்கள் என்பதை நினைவில் கொள்வோம். "மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; ..." என்று (நீதி.23:31) சாலொமோன் கூறுகிறான். நாமும் கூட நம்மை கவர்ந்திழுக்கக்கூடிய அழகுள்ள ஏதோ ஒன்றை பாராதிருப்போம். தேவன் நமக்கென்று கொடுத்திருக்கிற அத்தனையும் அழகுள்ளதே என்று கருதுவோம்.

**நான்காவதாக, நாம் நம்முடைய மீறுதலிருந்து நம்மை மறைக்க முடியாது அதற்காக மற்றவர்களை குற்றப்படுத்தவும் முடியாது – We should not hide from our mistake and should not blame others for them:**

இதை ஆதாமும் ஏவாளும் செய்தார்களா? "...ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைக் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக்கொண்டேன் என்றான்" (ஆதி.3:8-10). அதுமட்டுமா? இல்லை, மேலும் "அதற்கு ஆதாம் என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்

நாம் புசித்தேன் என்றான்.தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது நான் புசித்தேன் என்றாள்" (ஆதி.3:12-13). பார்த்தீர்களா? இங்கே தாங்கள் செய்த பாவத்தினிமித்தம் தங்களை ஒளித்துக் கொண்டு தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை என்பதை அறியாதிருந்தனர், மேலும் இவர்கள் தாங்கள் செய்த பாவத்திற்கு மாறிமாறி மற்றவர்களைக் குற்றப்படுத்தினர். தேவனாகிய கர்த்தர் இதை ஏற்றுக்கொண்டாரா? இல்லை, சிலவேளைகளில் நாமும்கூட தேவனுக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்யும் போது தேவசமூகத்தைவிட்டு பயந்து நம்மை ஒளித்துக் கொள்ளுகிறோம் அல்லது நம்முடைய பாவங்களை மறைக்க அவர்களால் தான் இவர்களால் தான் இப்படிச் செய்தேன், இப்படிச் சொன்னேன் என்று சொல்லி மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறோம். ஆனால் தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை என அறிந்து பயந்திருப்போம். ஆதாம் மற்றும் ஏவாளின் மீறுதல் பூமிக்கே சாபத்தைக் கொடுண்டுவந்ததுபோல் நம்முடைய ஆசீர்வாதக் குறைச்சலுக்கு நாமே காரணமாகாதபடி ஜாக்கிரதையாயிருப்போம்.

**ஐந்தாவதாக, நாம் விதைத்ததை நாம் அறுத்தே ஆகவேண்டும். If you dance to the music you have to pay the piper:**

நாம் செய்த நம்மைக்கானாலும் தீமைக்கானாலும் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். "...மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (எபே.6:7) என்று வேதம் கூறுகிறது. தேவனுடைய கட்டளையை மீறி தன் இச்சையை நிறைவேற்ற கர்த்தருக்கு விரோதமான காரியங்களை நினைத்தாலோ, செய்தாலோ, அதன் பலனை அறுவடை செய்தே ஆகவேண்டும். "பாவத்தின் சம்பளம் மரணம்..." (ரோம.6:23) என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் இன்று உலகில் பாவஞ்செய்கிறவர்களுக்கு மரணம் ஏற்படுகிறதா என்று நினைக்கக்கூடாது. இது ஆவிக்குரிய மரணம், தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரித்து தேவ மகிமையை இழக்கச் செய்யக்கூடிய பாவம். ஆம் அன்று ஆதாமும் ஏவாளும் கட்டளையை மீறி பாவஞ் செய்ததால், மனுஷன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தின் பலனை புசிக்கவேண்டியதாயிற்று. இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் வந்தது (ரோம.5:12). ஆனால் கிறிஸ்து என்னும் ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே விசுவாசிக்கிற நமக்கு நீதியும் கிடைக்கிறது (ரோம.5:19). இந்த நீதியைக் காத்துக்கொள்வோமாக!

**கடைசியாக, ஆதாமும் ஏவாளும் தாங்கள் நிர்வாணிகளாக இருக்கின்றோம் என்று அறிந்து அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள் (ஆதி.3:7) They covered with fig leaves:**

ஏன்? தங்களுக்குள் ஏற்பட்ட குற்றவுணர், பாவங்களை குறித்த விழிப்புணர்வு. நாம் கட்டளையை மீறிவிட்டோமே, இப்போது நிர்வாணிகளாக இருக்கின்றோமே என்று அறிந்தபடியினால் இப்படிச் செய்து கொண்டார்கள். ஆனால், "தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல்

உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்" (ஆதி.3:21). தேவனுடைய கரிசனையும் அன்பும் எவ்வளவு பெரிது! தாம் உண்டாக்கின தம்முடைய பிள்ளைகளின் பாவத்தின் விளைவால் ஏற்பட்ட நிர்வாணத்தை எவ்வளவு அழகாய் உடுத்துவிக்கிறார்! அவருடைய அன்பு பெரிது! சற்றே, தியானித்துப் பாருங்கள். அதே, தேவன் இன்றும் இருக்கிறவராகவே இருந்துகொண்டு நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நம்மை விட்டு நீக்கும்படி ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை அறிவீர்களா? "அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோம.5:19) என்று பரிசுத்த வேதம் கூறுகிறது. உங்களுக்கும் எனக்கும் இந்த நீதியுள்ள வாழ்வு வேண்டுமல்லவா? அப்படியானால், இன்றே தேவனுடைய புத்திரிகளாக மாற உங்களை ஒப்புக்கொடுங்கள். கிறிஸ்து இயேசுவை விசுவாசித்து உங்கள்பாவங்கள் கழுவப்படும்படி முயற்சியுங்கள்.

"ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா.3:26) என வேதம் கூறுகிறது. ஆம் நாம் நம்முடைய பாவங்கள், கழுவப்பட தேவனுக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவுக்குள், ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களாக கிறிஸ்துவையே நம்முடைய உடுப்பாக உடுத்திக்கொள்வோம். நித்திய ஜீவனுக்கென்று கிரியை நடப்பிபோம். அன்பான சகோதரிகளே, நமது ஆதித் தாயாகிய ஏவாளின் கீழ்ப்படியாமை, பிசாசுக்கு செவிகொடுத்து மீறுதலுக்கு உட்படுதல், இச்சை, பாவங்களை மறைத்தல், குறைகூறுதல் போன்ற காரியங்கள் ஆதாமையும் ஏவாளையும் தேவசமூகத்தை விட்டே பிரித்தது. தேவ ஆசீர்வாதத்தை இழந்தனர். இவைகள் நமக்கு சிறந்த பாடமல்லவா? கர்த்தருடைய வார்த்தைக்கு மட்டுமே செவிசாய்த்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வோம். தேவன் தாமே நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவிசெய்வாராக! ஆமென்!

**ஜெபியுங்கள்**



- ஒவ்வொரு நாளுக்காக நன்றி சொல்லி...
- சுதந்தர தினத்திற்காக...
- தேவனுடைய பிள்ளைகள் காக்கப்பட...
- சபைகள் சத்தியத்தில் வளர்ந்து சாட்சியாக வாழ...
- புதிய சபைகள் வளர்ச்சியடைய...
- நமது வேதாகம பள்ளி மாணவர்களுக்காக...
- ஒவ்வொரு வாரமும் மொபைல் மூலமாக நடைபெறும் ஊழிங்களுக்காக...



**The Word of Christ**
**Canara Bank A/c No.0946201000552**
**IFSC:CNRB0000946**

**மாத இதழுக்கான**
**சந்தா செலுத்த இரு வழிகள்**

**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**

சிறுவர் பகுதி

## நூற்றுக்கு அதிபதி - Centurian



ஹலோ, தம்பி, தங்காய்! எப்படியிருக்கீங்க? School க்கு தவறாமல் போறீங்களா? O.K. இப்போ நம்முடைய பாடத்திற்கு போவோமா? நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி உங்களுக்குத் தெரியும் தானே! ஆமா, நம் ஆண்டவர் இயேசு அற்புதர் எல்லாரையும் சுகமாக்கி சந்தோஷப்படுத்துகிற நல்ல ஆண்டவர். இப்படியாக, ஒரு நாள் கப்பர்கூம் என்ற ஊருக்கு இயேசு வந்தார். அப்பொழுது நூற்றுக்கு அதிபதி ஒருவன் இயேசுவினிடத்தில் வந்தாரு. இவரு ஏன் இயேசுவினிடத்தில் வந்தாரு இவரு தான் நூறு பேருக்கு தலைவனாச்சே என்று தானே யோசிக்கிறீங்க. ஆமா, இவருக்குக் கீழ் நிறையப்பேர் வேலை செய்து வந்தாங்க. ஆனா, இவருடைய வேலைக்காரன் படுகிற வேதனையைப் பார்த்து எப்படியாவது இயேசுவிடம் சென்று வேலைக்காரனை சுகப்படுத்தும் ஆண்டவரே என்று கேட்க வேண்டுமென்று இயேசுவிடம் வந்து, ஆண்டவரே என் வேலைக்காரனை சுகமாக்கும் என்று வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு, நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.

அதற்கு நூற்றுக்கு அதிபதி என்ன சொன்னான் தெரியுமா? ஆண்டவரே நீங்க என்னுடைய வீட்டுக்கு வர நான் தகுதியே இல்லாதவன். என்னிடம் நிறைய வேலைக்காரர்கள் இருக்காங்க அவங்களை நான்போய் இதைச் செய் என்றால் செய்வாங்க ஆனாலும் ஆண்டவரே நீங்க எங்க வீட்டுக்கு வருவதற்கு நான் பாத்திரவானே அல்ல. ஆண்டவரே, நீங்க ஒரு வார்த்தை மட்டும் சொல்லுங்க, என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று சொன்னான். இவன் எவ்வளவு பெரிய தலைவன்! எப்படிப்பட்ட தாழ்மை, எப்படிப்பட்ட விசுவாசம் இவனுக்கு இருந்தது அப்படித்தானே. ஆண்டவர் இயேசுவுக்கோ ஆச்சரியம். உடனே அவனுடைய விசுவாசத்தைக் கண்டு தேவனை அறிந்தவர்களிடத்தில் கூட இப்படிப்பட்ட விசுவாசத்தைப் பார்க்கவில்லை என்றார். நாமும் கூட பரம்பரை பரம்பரையாக கிறிஸ்தவர்களாய் இருப்போம். இயேசு ஆண்டவர் ஒரு வார்த்தை சொன்னா போதும் எல்லாமே நடக்கும் என்று சில நேரத்தில் நம்ப மாட்டோம். ஆனா இந்த தலைவன் நம்பினபடியால், இயேசு அவனைப் பார்த்து, "நீ போகலாம், உன் விசுவாசத்தின்படியே ஆகக்கடவது என்றார்". என்ன ஆச்சரியம் இயேசு எந்த நேரத்தில் இவ்வாறு சொன்னாரோ அதே நேரத்தில் நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகமடைந்து விட்டான்.

ஆம், தம்பி, தங்காய் இயேசுவால் கூடாதது எதுவுமே இல்லை. நீங்களும் ஆண்டவர் இயேசுவை விசுவாசித்து வேண்டிக்கொண்டால் உங்களுக்கும் நல்ல ஞானத்தைக் கொடுப்பார், அறிவைக்கொடுப்பார், நீ வேண்டிக்கொள்வதை எல்லாம் கொடுப்பார். நீங்களும் இயேசுவை விசுவாசித்து உங்களுக்கு வேண்டியதை எல்லாம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுவீங்க, அப்படித்தானே குட்டீஸ்? கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்க நானும் உங்களுக்காக ஜெபிக்கிறேன். O.K.வா?



**மனப்பாடவசனம்**

**"...மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்..." லூக்கா 18:27**

## வேத அறிவுப் போட்டி எண்: 264

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. ஏசாவினுடைய அந்தரங்கப் பொக்கிஷங்கள் எவ்வளவாய் எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டது?
2. தேவன் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினாரா?
3. ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபித்தவன் யார்?
4. ஆம், சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜனமுண்டாகட்டும் என்று யார் யாருக்கு எழுதுவது?
5. அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன் என்று சொல்லும் தீர்க்கன் யார்?
6. நியாயப்பிரமாணமானது எப்படிப்பட்ட மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது?
7. இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு பேசினார்?
8. என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா?
9. தேவனுடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் எது நிறைந்தது?
10. பாபிலோனிலுள்ள சபையும், என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 48

ஒலிவமலை - The Mount of Olive



1. இது எருசலேம் பட்டணத்திற்கு கிழக்கேயுள்ள மலை
2. தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு, ஒலிவமலையின்மேல் ஏறிப்போனான் – 2சாமு.15:30
3. இயேசு இராக்காலங்களில் ஒலிவமலையில் தங்கிவந்தார் – லூக்.21:37
4. இயேசுவானவர் ஒலிவமலையில் உட்கார்ந்திருக்கையில் சீஷர்கள் அவரிடத்தில் உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்னவென்று கேட்டார்கள் – மத்.24:3
5. ஸ்தோத்திரப்பாட்டை பாடினபின்பு ஒலிவலைக்குப் புறப்பட்டுப்போனார்கள் – மத்.26:30
6. கெத்செமனே தோட்டம் இந்த மலைச்சார்பில் இருந்தது – மாற்.14:32
7. இயேசு பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இடம் ஒலிவ மலை – அப்.1:12

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

August 2022




"அவர் செய்த அதிசயங்களையும்,
தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று
தேவா லயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள் ளைகளையும்
பிரதான ஆசாரியரு ம் வேதபாரகரும் கண்டு"...)
மத் தேயு 21:15




"அவன் உயர்ந்த இடங்களி ல்
வாசம்பண்ணுவான்; கன்மலைகளின்
அரண் கள் அவனுடைய உயர்ந்த
அ டைக்கலமாகும்" ஏசாயா 33:16

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):

- [ ] Refused
- [ ] No such person
- [ ] Address insufficient
- [ ] Left without instructions
- [ ] Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan